Srimate Ramanujaya Namah

KINCHITKARAM DHARMA SAMSTHAPANAM

# ராமாயண கதாபாத்திரங்களும் தொடர்பும்



வெளியிடுவோர்:
கிஞ்சித்காரம்
தர்மஸம்ஸ்தாபநம்
Phone: 7598417682, 9790531919
Email: kinchitdharmam@gmail.com



பல லட்சக்கணக்கான
வருடங்களுக்கு முன் நடந்தது ஸ்ரீ
ராமச்சந்திர பிரபுவின் அவதாரம்.
ஆனால் அந்த ராமாயணம் நடந்த
இடத்தை இப்போது நாம் இந்த
யாத்திரை மூலமாக தரிசிக்கப்
போகிறோம்.
அந்த ராமாயணத்தில் வருகிற
கதாபாத்திரங்களுக்கும் பாரத
தேசத்துக்கும் முக்கியமாக தென்
இந்தியாவிற்கும் எத்தனை
நெருங்கின தொடர்பு
இருக்கிறதென்று கீழ் உள்ள
பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.
படிக்க படிக்க நமக்கே மிகவும்
ஆச்சரியமாக இருக்கும்,நம்
கலாச்சாரத்தோடும், பண்போடும்
ராமாயணம் எவ்வளவு ஒன்றோடு
ஒன்றாக இணைந்து
இருக்கிறதென்று நாம் இப்போது
ஒவ்வொரு கதாபாத்திரமாக
பார்ப்போம்



# மாதா கௌசல்யா

## மாதா கௌசல்யா கோயில்



இது சத்தீஸ்கரில் உள்ள ராய்ப்பூரில் இருந்து 27 கிமீ தொலைவில் உள்ள சந்த்குரி கிராமத்தில் அமைந்துள்ளது .

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

2020 ஆம் ஆண்டில், அயோத்தியில் ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, சத்தீஸ்கர் முதல்வர் ஸ்ரீ பூபேஷ் பாகேல், கோவிலின் விரிவாக்கத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

பழமையான மாதா கௌசல்யா கோவிலின் அசல் வடிவத்தை அப்படியே வைத்திருக்கும் அதே வேளையில் பிரம்மாண்டமான தோற்றம் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

## சிறப்பு

மாதா
கௌசல்யாவுக்கு
அர்ப்பணிக்கப்பட்ட
உலகின் ஒரே
கோயில் இதுவாகும்.



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**மாதா கௌசல்யாவின் பிறப்பிடம் என்பதால் சத்தீஸ்கருக்கும் ராமருக்கும் இடையே உள்ள தொடர்பு ஆழமாக வேரூன்றியுள்ளது**

சத்தீஸ்கர் ராமரின் தாய் வீடு. அவர் நாடுகடத்தப்பட்ட காலத்தில் (வனவாஸ்), முன்பு தண்டகாரண்யா என்று அழைக்கப்பட்ட இந்த மாகாணத்தின் காடுகளில் அவர் அதிக நேரம் செலவிட்டார் என்று கூறப்படுகிறது.

# வால்மீகி

## வால்மீகி கோவில்






கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**வால்மீகி கோவில் சென்னை திருவான்மியூரின் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ளது**

## சிறப்பு

இவரது பெயராலேயே இத்தலம் திருவால்மீகியூர் என்று அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் திருவான்மியூர் என்று மருவியது.

சிறு மண்டபம் போலமைந்துள்ள இக்கோயில் சுமார் 1200 ஆண்டுகள் பழமையானது.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

மருந்தீசுவரர் கோவிலுக்கு அருகிலுள்ள திருவான்மியூரின் ஒரு பகுதி வால்மீகி நகர் எனப் பெயரிடப்பட்டுள்ளது. தெற்கு நோக்கி கடற்கரை வழியே பயணப்பட்ட வால்மீகி இவ்விடத்தில் ஓய்வெடுத்ததாக மரபுவழிச் செய்தி நிலவுகிறது.

# கம்பர்

## கம்பர் மணி மண்டபம்



தேரழுந்தூர் அல்லது திருவழுந்தூர் தமிழ்நாட்டின் சோழ நாட்டுக் காவிரித் தென்கரையில் உள்ள மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள குத்தாலம் வட்டம் மற்றும் குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், தேரழந்தூர் ஊராட்சியில் அமைந்த சிற்றூர் ஆகும்.






## சிறப்பு

கம்பர் இவ்வூரில் பிறந்ததற்கு ஆதாராமாக உள்ள கம்பர் மேடு எனும் பகுதி இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

# கம்பர் கோவில்

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டை அருகேயுள்ள கருதுப்பட்டி என்ற கிராமத்தில்தான் 1,000 ஆண்டுகள் பழமையான கம்பர் நினைவிடம் அமைந்துள்ளது.





## சிறப்பு

இன்றும் இந்தப் பகுதியில் பிறக்கும் குழந்தைகளுக்கு கம்பர் சமாதி உள்ள இடத்திலிருந்து மண் எடுத்து குழந்தையின் நாக்கில் வைப்பது வழக்கமாக உள்ளது. அப்படிச் செய்வதால், குழந்தை நல்ல தமிழாற்றலோடும், மிகுந்த தமிழ் அறிவுடனும் வளரும் என்பது காலங்காலமாக இருந்துவரும் நம்பிக்கை.

# விஸ்வாமித்திரர்

## விஸ்வாமித்திரர் கோவில்



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

திருநெல்வேலியிலிருந்து வள்ளியூர் வழியாக சென்று,அங்கிருந்து ராதாபுரம் வழியாக சென்றால், அங்கிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கடற்கரை கிராமமான இந்த விஜயாபதி, கூடங்குள அணுமின் நிலையத்திலிருந்து வெறும் 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்த திருக்கோவில்



## சிறப்பு

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**விஜயாபதி என்றால் வெற்றிக்குச் சொந்தமான இடம் என்று பொருள்படும். ஆனால், விஸ்வாமித்திர மகரிஷி இழந்த தன் சக்தியை மீட்டெடுக்க வேண்டி தேர்ந்தெடுத்த இடம்தான் இந்த விஜயாபதி.**

# விபீஷணர்

## திருக்கண்ணபுரம் சவுரிராஜப் பெருமாள் கோயில் திருவாரூர் மாவட்டம், திருக்கண்ணபுரம் சவுரிராஜப் பெருமாள் கோயில் ராமபக்தரான விபீஷணருக்கு தனிசன்னதி உள்ளது



## சிறப்பு

இத்தலத்தில் விபீஷணருக்கு, விஷ்ணு நடையழகு காட்டும் நிகழ்ச்சி ஒவ்வொரு அமாவாசையன்றும் நடக்கிறது.

# ஸ்ரீரங்கம் கோயில்
# திருச்சி

## விஷ்வக்ஸேனர் சன்னதியில் அனுமனுடன் விபீஷணன் உள்ளார்



**சிறப்பு**

# ஸ்ரீபண்டார வாசல் 4 கால் மண்டபம், துறைபிரட்ஷசனம் தூணிலும் வீபீஷ்ணன் ஸ்ரீரங்க விமானம் பெறும் சிற்பம் உள்ளது



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

# கோதண்டராமர் திருக்கோவில்

இராமேஸ்வரத்தில் இருந்து
தனுஷ்கோடி செல்லும் வழியில்
இரு பக்கமும் நீர்சூழ
அமைந்துள்ளது.






விபீஷணருக்கு இலங்கையின்
அரசனாக பட்டாபிஷேகம் செய்த புனித
ஸ்தலமாக இப்பகுதி கருதப்படுகிறது.

# ஜடாயு

## அருள்மிகு
## விஜயராகவப் பெருமாள் கோயில்







காஞ்சிபுரத்திற்கு அருகே
திருப்புட்குழியில் கோயில் உள்ளது

## சிறப்பு

திருப்புட்குழி பெருமாள் ஜடாயுவை
தொடையின் மேல் தூக்கி
வைத்துள்ளார்.

# வல்வில் ராமர் கோயில்





கும்பகோணத்துக்கு அருகில் உள்ளது சுவாமிமலை. இந்த ஊருக்கு அருகில் உள்ள ஆதனூரில் இருந்து சுமார் 3 கி.மீ. பயணித்தால் புள்ளபூதங்குடி எனும் திருத்தலத்தை அடையலாம்.

## சிறப்பு

ஜடாயுவிற்கு மோட்சம் அளித்த தலம், புள்ளபூதங்குடி என்று போற்றப்படுகிறது. இங்கே உள்ள ஜடாயு தீர்த்தம் விசேஷமானது என்கிறார்கள் பக்தர்கள்.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்



தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொண்டு ஸ்ரீராமரை வணங்கித் தொழுதால், தெரிந்தோ தெரியாமலோ, பறவைகளைக் கொன்ற பாவமும் ஏழு தலைமுறை பாவங்களும் நீங்கிவிடும் என்பது ஐதீகம்.

# லட்சுமி நாராயணர் கோவில்



திருநெல்வேலி அருகே
அருகன்குளம் கிராமத்தில்,
தாமிரபரணி நதிக்கரையில்
அமைந்துள்ளது லட்சுமி நாராயணர்
கோவில்.



## சிறப்பு

இந்த ஆலயம் ஜடாயு தீர்த்த
கிணற்றின் மேல்
அமைக்கப்பட்டிருப்பது
விசேஷமானதாகும்

# ஜடாயு பக்க

பத்ராச்சலம் நகரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருக்கும்.





## சிறப்பு

ஜடாயுவின் இரு கைகளையும் இராவணன் வெட்டி வீழ்த்திவிட்டான். அந்த கைகளில் ஒன்று ஜடாயு பக்க இடத்திலிருந்து 55 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ரேக்காபள்ளி என்ற இடத்தில் விழுந்ததாக கூறப்படுகிறது.

# ஸ்ரீ விஜய கோதண்டராமன் ஆலயம்

நாகை மாவட்டம் சீர்காழி - மயிலாடுதுறை சாலையில் உள்ள வைத்தீஸ்வரன் கோவில் புதிய பேருந்து நிலையம் அருகே இந்த ஆலயம் இருக்கிறது




## சிறப்பு

இன்றும் வைத்தீஸ்வரன் கோவில் வைத்தியனாத சுவாமி ஆலயத்தின் தென் பாகத்தில் ஜடாயு சமாதி உள்ளது. அந்த இடத்தில் ஜடாயு குண்டம் ஒன்றில் விபூதி நிறைந்து உள்ளது.

# பரதன்

## பரதன் கோவில்

## கேரளாவில் நாலம்பலம் இரிஞ்சாலக்குடா



## சிறப்பு

இக்கரு வறையில் இருக்கும் பரதன் நான்கு கரங்களுடன், வலதுபக்க மேற்கரத்தில் தண்டம், கீழ் கரத்தில் அட்சமாலை, இடதுபக்க மேற்கரத்தில் சக்கரம், கீழ் கரத்தில் சங்கும் கொண்டு நின்ற நிலையில் விஷ்ணுவாகவே காட்சி தருகிறார்.

# சத்ருக்கனன்

## சத்ருக்கனன் கோவில்






## பாயம்மல்



## சிறப்பு

சத்ருக்கனன் பெருமாள் சதுர் புஜ விஷ்ணுவாக நான்கு திருக்கரங்களுடன், வலதுபுறம் மேற்கரத்தில் சக்கரம், கீழ் கரத்தில் தாமரை மலர், இடதுபுறம் மேற்கரத்தில் சங்கு, கீழ் கரத்தில் கதை ஆகியவைகளைக் கொண்டு, நின்ற நிலையில் சேவை சாதிக்கின்றார்.

# இலட்சுமணன்

## கோதண்ட ராமர் கோயில்

## திருப்பதி


கிருசித்தாரம் தர்மஸம்ஸ்தாபநம்

## சிறப்பு

வராக புராணத்தின் படி, திரேத யுகத்தின் போது, ஸ்ரீராமர் இலங்கையிலிருந்து திரும்பியபோது சீதா தேவி மற்றும் இலட்சுமணருடன் இங்கு வசித்து வந்தார்.

# இலட்சுமணன் கோவில்

கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.





## சிறப்பு

இத்தலத்திற்கு இலக்குவன் கோபுரம், மண்டபம் போன்றவற்றை எழுப்பி பல திருப்பணிகள் செய்தான். இலட்சுமணனின் திருப்பணிக்குப் பிறகு இலட்சுமணனையே மூலவராக வைத்து வழிபாடு செய்ய  தொடங்கினர் என்பது இங்கு சொல் வழக்கு.

## குஜராத்  பரடியா

இந்த கோவில்கள் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குஜராத்தில் சௌலுக்கிய வம்சத்தின் இரண்டாம் பீமாவின் ஆட்சியின் போது கட்டப்பட்டது.



## சிறப்பு

இவை குஜராத்தில் உள்ள பழமையான வைணவக் கோயில்கள் ஆகும். இந்தக் கோயில்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டு , இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பராமரிக்கப்படுகின்றன .

# பரதன், லட்சுமணன், சத்ருக்கனன், அங்கதன் & சுக்ரீவன்

## கோதண்ட ராமர் கோயில்
## அயோத்திய பட்டினம் சேலம்



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**ஆதிகாலத்தில் இந்தப் பகுதியில் பரத்வாஜ முனிவரின் ஆசிரமம் அமைந்திருந்தது. ராவண வதம் முடிந்து திரும்பிய ராமபிரான், இவ்வழியே வரும்போது, முனிவரைச் சந்தித்தார்.**

## சிறப்பு

பரத்வாஜ முனிவரின் வேண்டுகோளின்படியும், விபீஷ்ணனின் பிரார்த்தனையை ஏற்றும் இந்த இடத்தில், சீதாபிராட்டியுடன் சேர்ந்து பட்டாபிஷேகக் கோலத்தை காட்டியருளினாராம் ராமபிரான்.ஆக, அயோத்தியில் பட்டாபிஷேக கோலத்தில் காட்சி தருவதற்கு முன்பாகவே, இங்கு முதன்முதலாக பட்டாபிஷேகக் கோலத்தில் காட்சி தந்ததால்தான் இவ்வூர் அயோத்தியா பட்டணம் என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இங்கே, ராமர் மூன்று நாட்கள் தங்கி இருந்ததாகக் கூறுகின்றனர்.ராமர் மற்றும் சீதைக்கு பரதன், லட்சுமணன், சத்ருக்கனன் ஆகியோர் சேவை சாற்றியபடியும், அங்கதன், சுக்ரீவன், ஆஞ்சநேயர் ஆகியோர் ராமபிரான்-சீதாதேவியை சேவித்தபடியும் உள்ளனர்.

## பரதன், லட்சுமணன், சத்ருக்கனன், அங்கதன் & சுக்ரீவன்



# இன்னொரு விசேஷ அம்சம். இத்தலத்தில் மட்டுமே ராமரும் சீதையும் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கின்றனர். 28 தூண்களில், நான்கு மூலைகளில் உள்ளவை இசையை உண்டாக்கும் தூண்களாகத் திகழ்கின்றன.

# பரதன், லட்சுமணன், சத்ருக்கனன்

## ஸ்ரீ ராமஸ்வாமி திருக்கோவில்

கும்பகோணத்தில் பெரிய கடைத்தெருவின் தெற்கு கோடியில் அமைந்துள்ளது



கிஞ்சித்காரம் தர்மஸம்ரக்ஷணம்



மூலவர் ராமபிரான் பட்டாபிஷேகக் கோலத்தில் ஸீதையுடன் ஒரே ஆஸனத்தில் அமர்ந்து கையில் வில் இல்லாமல் காட்சி அளிக்கிறார்.

## சிறப்பு

வலப்புறம் லக்ஷ்மணன் வில்லை தாங்கி நிற்க பரதன் வெண்கொற்றக் குடைபிடிக்க, சத்ருக்கனன் சாமரம் வீச, ஆஞ்சனேயர் ஒரு கையில் வீணையும், மற்றொரு கையில் ராமாயண புஸ்தகமும் ஏந்தியவாறு அற்புத தரிசனம் அளிக்கின்றனர்.

# ஜனகர்




அருள்மிகு ஜெனகை நாராயண பெருமாள் திருக்கோயில் சோழவந்தான் நகரின் மையப்பகுதியில் இத் திருக்கோயில் அமைந்துள்ளது

## சிறப்பு

ஸ்ரீமன் நாராயணனே மாப்பிள்ளையாக வேண்டி ஜனகர் தவம் இருந்த பெருமை வாய்ந்த தலம் ஆகும்.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்





ஆஞ்சநேயரின் வாலின் நுனியில் மணி கட்டியிருக்கும்.

# வாலி

## வாலிகண்டபுரம் வாலீசுவரர் கோயில்





பெரம்பலூர் மாவட்டத்தில்
உள்ள சிவன் கோயிலாகும்.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

கோனேரி ஆற்றங்கரையில்
வாலாம்பிகை உடனுறை
வாலீஸ்வரர் கோவில், பெரம்பலூரில்
இருந்து சென்னை செல்லும் 4
வழிச்சாலையில் 15 கிமீ.
தொலைவில் உள்ளது.

## சிறப்பு

இக்கோயிலின் மூலவராக வாலீசுவரர்
உள்ளார். அம்பாள் பெயர்
வாலாம்பிகை. வாலி வழிபட்ட ஈசுவரர்
என்ற நிலையில் இவ்வாறு
அழைக்கப்படுகிறார்

# வாலிகண்டபுரம் வாலீசுவரர் கோயில்

வாலியை நினைவுகூறும் வகையில் திருக்குளத் தூணிலும், ஆங்காங்கே பல இடங்களில் வாலியின் சிற்பங்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. அவற்றில் பல வாலி மயமாக உள்ளன என்று கூறலாம்




இங்கு வந்து மூலவரை பூசித்த பின்னர் வாலிக்கு எதிராளியின் பலத்தில் பாதி பலம் கிடைத்ததாகக் கூறுகின்றனர். அன்னை வாலாம்பிகை ஆவார். சரவண தீர்த்தம் கோயிலின் தீர்த்தமாக உள்ளது.

# திரிசடை

## திருக்கண்ணபுரம் சவுரிராஜப் பெருமாள் கோயில்



திருவாரூர் மாவட்டம், திருக்கண்ணபுரம் சவுரிராஜப் பெருமாள் கோயிலில் ராமபக்தரான விபீஷணருக்கு தனி சன்னதி உள்ளது

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

## சிறப்பு

விபீஷணனின் மகளான திரிசடை அசோகவனத்தில் சீதைக்குக் காவலாக மட்டுமின்றி, உறுதுணையாகவும், நம்பிக்கை ஊட்டியவளாகவும் இருந்தவள், இங்கு சன்னதி உள்ளது



குறிப்பு:
மேலுள்ள தகவல்கள் அனைத்தும் கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபனத்தின் சேவகர்களால் இணையதளத்திலிருந்து சேகரித்து எழுதப்பட்ட ஒரு முயற்சி.

**References :**


- ta.quora.com/விஸ்வாமித்திர-மகரிஷி
- ta.wikipedia.org/wiki/வாலிகண்டபுரம்_வாலீசுவரர்_கோயில்
- ta.m.wikipedia.org/wiki/வால்மீகி_கோவில்,_திருவான்மியூர்
- hinduspritualarticles.blogspot.com/2017/03/blog-post_17.html?m=1
- hinduspritualarticles.blogspot.com/2017/03/blog-post_17.html?m=1
- tamil.nativeplanet.com/travel-guide/place-where-ravana-cut-jadayu-s-hands-001629.html
- ta.wikipedia.org/WIKI/கோதண்டராம_கோயில்,_திருப்பதி
- srirangam.org/
- ta.wikipedia.org/WIKI/சத்துருக்கனன்_கோயில்
- www.dailythanthi.com/Others/Devotional/2017/09/141 32351/Irinjalakuda-Baratan-Temple.vpf?infinitescroll=1
- ta.wikipedia.org/s/2bl
- temple.dinamalar.com/New.php?id=261
- ta.m.wikipedia.org/wiki/கம்பர்
- kathir.news/news/lakshmi-narayana-gave-jatayu-the-moksha/cid1581419.htm?infinitescroll=1
- ta.m.wikipedia.org/WIKI/ புள்ளபூதங்குடி_வல்வில்_ராமர்_கோயில்



இத்தனை விஷயங்களையும் நாம் இன்று அறிந்து கொண்டோம். நாம் அடுத்து செய்ய வேண்டியது என்ன? வேறென்ன ?! இந்த கோயில்களுக்கெல்லாம் நேரில் சென்று தரிசித்து ராமாயணத்தை ஆத்மார்த்தமாக அனுபவிக்க வேண்டியது தான்!

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**ஜெய் ஸ்ரீ ராம் !**